SUBORDINATE COURT, PADMANABHAPURAM
CASE NO.SC.105/2015
Deposition of P.W. 4

Name : திரு. எரிக் மார்ஷன்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:08.11.2023**
**(Accused Present).**

**முதல் விசாரணை-**

நான் கடந்த 25 ஆண்டுகளாக தக்கலையில் வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். தக்கலை காவல்நிலைய குற்ற எண்.780/2010 வழக்கில் உட்பட்ட சம்பவ இடத்தையும், அதன் சுற்றுபுறத்தையும் 16.09.2010 அன்று தக்கலை காவல் ஆய்வாளர் பார்வையிடும் போது நானும், முத்தலகுறிச்சி பகுதியை சேர்ந்த ராமசுவாமி என்பவரும் உடன் இருந்தோம். அவர்கள் தயார் செய்த பார்வைமகஜர், அத்தாட்சியில் நானும், மேற்படி ராமசுவாமியும் கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு அருகே நிறைய கடைகளும், வழக்கறிஞர் அலுவலகங்களும் உள்ளது. வழக்கு சம்பவ இடத்திற்கு அருகில் எனது அலுவலகம் கிடையாது. அ.சா.1 பாலையா என்னிடம் வழக்கறிஞர் - எழுத்தராக பணியாற்றியதில்லை. வழக்கு சம்பவ இடத்தை காவல் ஆய்வாளர் பார்வையிடும் போது நிறைய பொதுமக்கள் இருந்தார்கள். அப்போது பல வழக்கறிஞர்களும் உடன் இருந்தார்கள் என்றால்அதை நான் பார்க்கவில்லை. நான் பார்வை மகஜரில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியது போன்று சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும், என் முன்புக்கு பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை

என்றும் சொன்னால் சரியல்ல.